<u>செய்தி வெளியீடு எண்.452</u>　　　　　　　　　　　　　　　　　<u>நாள்.17.6.2008</u>

# செய்தி வெளியீடு

## போலி குடும்ப அட்டைகளை களையவும், தல தணிக்கை மேற்கொள்ளவும் அரசு அலுவலர்களுக்கு பயிற்சி

## மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் துவக்கி வைத்தார்கள்

கோயம்புத்தூர் மாவட்டம், ஆர்.எஸ்.புரம், திவான் பகதூர் சாலையிலுள்ள ராஜஸ்தானி கல்யாண மண்டபத்தில் போலி குடும்ப அட்டைகளை களையவும், தல தணிக்கை மேற்கொள்ளவும் அரசு அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்பினை மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் இன்று (17.06.2008) காலை 10.00 மணிக்கு துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிசாமி அவர்களும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசுச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., மற்றும் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளர் திரு. க. இராஜாராமன், இ.ஆ.ப. மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு, வெ.பழனிகுமார் இ.ஆ.ப அவர்களும் பங்கு பெற்றனர்.

கிராம நிர்வாக அலுவலர்கள், பல்வேறு துறை அரசு அலுவலகங்களில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள், விருப்பம் தெரிவித்துள்ள பள்ளி ஆசிரிய ஆசிரியைகள் ஆகியோர்களுக்கு வீடு வீடாக சென்று எப்படி கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள வேண்டும், எப்படி பொது மக்களிடம் அன்பாகவும், கண்ணியமாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. தலத் தணிக்கை நிறைவு பெற்றதும் துணை வட்டாட்சியர் நிலையில் உள்ளவர்கள் மேல் ஆய்வு செய்வார்கள். அத்தகைய அலுவலர்களும் பயிற்சி வகுப்பில் பங்கு பெற்றனர்.

பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் குடும்ப அட்டைகளை கணக்கெடுத்து சீரமைக்கும் இப்பணி மிகவும் அவசியமானது. இப்பணியை மேற்கொள்வதால் உண்மையான பயனாளிகள் யாரும் பீதியடையவேண்டாம். உண்மையான பயனாளிகளுக்கு உரிய அத்தியாவசியப் பொருட்கள் மட்டும் அல்ல. இலவச கலர் டி.வி, இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்பு போன்ற அரசு சலுகைகளை உரியவர்களுக்கு உரிய அளவுடன் வழங்குவதே அரசின் தலையாய நோக்கம் ஆகும். கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளும்போதே குடும்ப அட்டை இதுவரை வாங்காதவர்கள், குடும்ப அட்டை வாங்க விண்ணப்பங்கள் கொடுத்துள்ளவர்கள், விலாசம் மாறி வசிப்பவர்கள், வெளி மாவட்டங்களுக்கு மாறுதலாகி சென்ற பணியாளர்கள் போன்ற விவரங்களும் சேகரிக்கப்படுகிறது. அந்த விவரங்களின் அடிப்படையில் குடும்ப அட்டை கிடைக்காத தகுதியான குடும்பங்களும் குடும்ப அட்டை பெற வாயப்ப ஏற்படும். வீடு மாறியவர்களுக்கு குறிப்பிட்ட அட்டையில் உடனடியாக விலாச மாற்றம் செய்து தரப்படும். உண்மையான குடும்ப அட்டைகள் கணக்கெடுக்கப்படுவதால் பயனாளிகள் தேவைப் பட்டியல் அடிப்படையில் அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு

அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் உரிய பொருட்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்கள். பயிற்சி வகுப்பில் அலுவலர்களுக்கு கீழ்க்கண்ட அறிவுரைகளை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

1. பயிற்சியாளர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் தவறாமல் நேரில் சென்று பொறுப்புணர்வுடன் தலத் தணிக்கை செய்ய வேண்டும்.

2. குடும்பத் தலைவரிடமே நேரில் விசாரணை செய்ய வேண்டும்.

3. எந்த வீட்டிற்கு சென்றாலும் கனிவாகவும், மரியாதையாகவும், எவ்வித புகார்களுக்கு இடமின்றியும் நடந்து கொள்ள வேண்டும்.

4. ஒரு வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்ப அட்டைகள் இருந்தால் தனி சமையல் அறையுடன் தனி குடும்பமாக வசிக்கிறார்களா, அல்லது கூட்டுக் குடும்பமாக வசிக்கிறார்களா என்பதை விசாரணை செய்ய வேண்டும்.

5. குடும்ப உறுப்பினர்கள் தற்காலிகமாக வெளியூர் சென்று கதவு பூட்டப்பட்டிருந்தால் அத்தகைய குடும்பங்களை இரண்டு மூன்று முறை சென்று விசாரணை செய்ய வேண்டும்.

6. நாட்டுக்காக, நாட்டு மக்ளுக்காக செய்யும் மாபெரும் சேவையென கருதி தன்னார்வத்துடன் இச்சேவையை செய்ய வேண்டும்.

7. அரசு அலுவலர்கள் அவர்களுடைய பணிக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் இப்பணியை மேற்கொண்டு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இப்பணியை நிறைவு செய்ய வேண்டும்.

8. இதில் தவறுகள் எதுவம் ஏற்படாமல் கவனமாக இப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

மேல் ஆய்வு அலுவலர்கள் துணை வட்டாட்சியர் மற்றும் கண்காணிப்பாளர் நிலையில் இருப்பார்கள். மேல் ஆய்வுப் பணியை சரியாக மேற்கொள்கிறார்களா என்பதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

பொது மக்கள் கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளும்போது போலி குடும்ப அட்டைகளை பற்றி விவரம் தெரிந்தால் அதை கணக்கெடுப்பு அலுவலர்களிடம் தெரிவிக்கலாம் என்றும் இப்பணிக்கு பொது நலன் கருதி பொது மக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு தரும்படி கேட்டுக் கொண்டார்கள்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிசாமி அவர்கள் பயிற்சியாளர்களுக்கு வழங்கிய அறிவுரைகளை தொடர்ந்து, திரு.க.சண்முகம் இ.ஆ.ப அரசு செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோா பாதுகாப்ப துறை, திரு. க. இராஜாராமன், இ.ஆ.ப., ஆணையாளர் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர், பயிற்சியாளர்களுக்கு பயிற்சியை தொடர்ந்தனர்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9